**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்**

-------------------------------------------------

**1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம்**

------------------------------------------------------------------

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திடம் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (இசை) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (நடன) கம்பனி எனும் துணைக்கம்பனிகள் இருந்த போதிலும் அக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களுடன் மன்றத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதிக்கூற்றுக்கள்**

------------------------

**2.1 அபிப்பிராயம்**

----------------------

இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாதுள்ளது.

**2:2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------

**2:2:1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நான்கு தரவுகள் முன்னைய ஆண்டின் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு தெளிவாக நிதிக்கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 22 மற்றும் 26 இன் பிரகாரம் முதலீடு பெறுமதியிடப்பட்டு உரிய மாற்றங்களுக்கான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 1982 ஆம் ஆண்டு முதல் சபையின் மூன்று துணை கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,032,360 தொகையான முதலீடுகள் பெறுமதியிடப்படாது அவை கிரயப் பெறுமதியில் நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 24 இன் பிரகாரம் அரசாங்கத்தின் மூலதன மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி உரிய மூலதன மானியக் கணக்கிற்கு வருடாந்தம் சீராக்கப்பட வேண்டிய போதிலும் அரசாங்கத்திடமிருந்து மூலதன மானியமாக மன்றத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,164,685,059 தொகை இதன் பிரகாரம் கணக்கிடப்பட்டிராததுடன் பெறப்பட்ட மூலதன மானியம் உறுதியாக நிலையான சொத்துக் கொள்வனவிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒரு வருடத்திற்கு மேலான ஆயுட்காலத்தைக் கொண்ட, விவசாயப் பண்ணையில் வைத்துக்கொள்ளப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்டு வருமானத்தை உழைப்பதை நோக்காகக் கொள்ளாத ரூபா 608,000 தொகையான கால்நடை வள இருப்பு நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் வியாபார இருப்பாக காண்பிக்கப்பட்டதனால் மீளாய்வாண்டின் விவசாயப் பண்ணை தொழிற்பாட்டு கணக்கின் இலாபம் ரூபா 608,000 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இளைஞர் அபிவிருத்தியின் கீழ் 02 செலவின விடயங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் கூட்டுத்தொகைக்கும் வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள இவ் விடயங்கள் இரண்டினதும் கூட்டுத்தொகைக்கும் இடையில் ரூபா 2,199,211 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

------------------------------------------

05 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 7,750,879 தொகையான 144 கடன் மீதிகள் காணப்பட்டதுடன் இதில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 1,403,447 தொகையும் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,243,401 தொகையான கடன் மீதியும் காணப்பட்டன.

**2:2:4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ரூபா 43,820,015 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிய சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்துவதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| 08 வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற மீண்டெழும் அபிவிருத்திப் பெறுவனவுகள் | 4,382,679 | உடன்படிக்கை உள்ளடங்கலாக உரிய ஆவணங்கள் |
| மாகாண சபை மீண்டெழும் பெறுவனவுகள் | 553,823 | கோவைகளின் விபரம் |
| பன்முகப்படுத்தப்பட்ட மூலதனப் பெறுவனவுகள் | 93,153 | உரிய ஆவணங்கள் |
| வெளிநாட்டு அபிவிருத்தி மூலதனப் பெறுவனவுகள் | 1,787,683 | உடன்படிக்கைகள் உள்ளடங்கலாக உரிய ஆவணங்கள் |
| இளைஞர் சமூகத்திற்காக விளையாட்டு உபகரணக் கொள்வனவு | 2,039,730 | பகிர்வு விபரம் |
| கடன்பட்டோர் | 20,842,770 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| கடன்கொடுத்தோர் | 14,120,177 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |

**2.2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரச்சட்டம்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 மற்றும் 26 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பணம் விசேட நிதியத்தின் கீழ் திறைசேரியில் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து செலவிடப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக முருகண்டி கோயில் புகையிரத நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பொது மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 2,417,132 தொகை சபையின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை

2.14, 5.4.4, 5.4.10, 8.9.1 ஆகிய பந்திகளுக்கு முரணாக முறையே 4 சந்தர்ப்பங்களின் போது விலை மனுக்கோரல்கள் இன்றி ரூபா 2,943,251 தொகையும், பிணை முறிகள் இன்றி ரூபா 495.000 தொகையான முற்பணமும் செயற்பாட்டு பிணைமுறி இன்றி ரூபா 2,475,000 தொகையும், ஒப்பந்த உடன்படிக்கை இன்றி ரூபா 1,861,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) சுற்றறிக்கை

(i) மன்றத்தின் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) நியமிக்கப்பட்டிருந்தார். 13/ 2008 ஆம் இலக்க 2008 யூன் 26 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கு முரணாக நிரந்தரப் பதவிக்குரிய படிகளுக்கு மேலதிகமாக பதில் கடமையாற்றும் பதவிக்குரிய மாதாந்த எரிபொருட் படியாக ரூபா 17,250 தொகையும் பெறப்பட்டிருந்தது.

(ii) கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சு செயலாளரின் எம்பீடீஜ/ எம்பீஆர்டீ/ வீஈச் ஆம் இலக்க 2002 செப்தெம்பர் 11 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நிறுவகத்திடமிருந்து வாடகை அடிப்படையில் வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைக்கு மாறாக எவ்வித சேவை உடன்படிக்கையும் இன்றி ஒரு தனியார் நிறுவகம் ஒன்றிடம் அச் சேவையைப் பெற்று 2010 ஆம் ஆண்டின் போது மாத்திரம் போக்குவரத்து கட்டணமாக ரூபா 476,798 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஆட்சேர்ப்பு நடைமுறை

---

மன்றத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், பணிப்பாளர் பதவிக்காக இருக்க வேண்டிய அடிப்படை தகமைகளைக் கொண்டிராத ஓர் உத்தியோகத்தர் இரண்டாம் நிலை அடிப்படையில் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 06 ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சருக்கு உள்ள அதிகாரங்களின் பிரகாரம் வழங்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகத்தினால் இந்த ஆட்சேர்ப்பு நேர்ந்துள்ளதாக அவரால் 2011 மே 31 ஆம் திகதி எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 3:1 நிதிசார் மீளாய்வு

---

#### 3:1:1 நிதிசார் விளைவுகள்

---

மீளாய்வாண்டின் போது மன்றத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 100.68 மில்லியன் தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 73.40 மில்லியன் ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 27.28 மில்லியன் தொகையான வீழ்ச்சியைக் காண்பித்தது.

**3.1.2 நிதிசார் விளைவுகளின் விபரம்**

**-------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 70.11 மில்லியனால் தொகையால் குறைவடைந்தமையும், உள்ளக உழைப்பு ரூபா 21.31 மில்லியனால் அதிகரித்தமையாலும் சாதகமான முரண் ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட அரசாங்க மானியம் மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக அமைச்சில் இருந்தும் அரசாங்க நிறுவகங்களிடம் இருந்தும் பெறப்பட்ட வெளிவாரி பங்களிப்பு முறையே ரூபா 8.60 மில்லியன் தொகையாலும் ரூபா 54.96 மில்லியன் தொகையாலும் குறைவடைந்திருந்தமையும் ஆண்டின் போது பணிக்கொடைக் கொடுப்பனவுச் செலவினம் ரூபா 54.92 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமையும் இந் நிதிசார் விளைவுகள் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாகியிருந்தன.

**3.1.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

**----------------------------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கம்பஹா மாவட்டக் காரியாலயக் கண்காணிப்பின் கீழ் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இசைக் குழு 2004 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இக் குழுவிற்காக சபையினால் வழங்கப்பட்ட ரூபா 855,118 தொகையான இசைக்கருவிகள் மீள மன்றத்துக்கு வழங்கப்படாது உடுகம்பொல பிரதேச இளைஞர் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய இளைஞர் சேவை மன்றதத்தின் கீழ் கொண்டுவரப்படாதப்படாத சுதந்திர நிறுவகமான இளைஞர் அதிகாரசபையின் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ள நிறைவேற்றுச் செயலாளருக்கு இளைஞர் அதிகாரசபையின் விடயத்திற்கு உரித்தான 10 ஆவது சர்வதேச வெற்றிக்கேடய கருத்தரங்களில் கலந்துகொள்வதற்கு வெளிநாட்டிற்குச் செல்வதற்காக ரூபா 21,902 தொகையும் வரிசை அமைச்சில் ஈடுபடுத்தப்பட்டு சேவையாற்றும் கமரா தொழிநுட்பவியலாளருக்காக இந்தியாவில் நடைபெற்ற பயிற்சிப் பாடநெறிகளுக்காக ரூபா 45,000 தொகையும் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 3.1.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இளைஞர் சங்கங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்காக 945 கரம் போட்கள் ரூபா 1,370,250 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு வழிக்காட்டிக் கோவையின் 8.9.1(ஆ) உப பந்தியின் பிரகாரம் முறையான எழுத்து மூல ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. களஞ்சியப் பொறுப்பாளரினால் அப் பொருட்கள் முறையாக கையேற்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்களும் பகிர்ந்தளிக்கப்பட்ட இளைஞர் சங்கங்களின் பெயர்ப்பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்பாட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 44,578,150 தொகையான 04 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிராததுடன் செயற்பாட்டுத்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிராத 03 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 33,797,606 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னோடி இளைஞர் நிகழ்ச்சித்திட்டம்

2006 ஆம் ஆண்டின் போது இளைஞர் அபிவிருத்தி தொடர்பாக 14 மூன்று நாள் செயலமர்வுகள் நடாத்தப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,160 இளைஞர்களுக்கு 2008 ஆம் ஆண்டின் போது மீண்டும் மூன்று நாள் வதிவிடப் பயிற்சிகள் வழங்கப்பட்டதை அடுத்து 06 இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் அவர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இதனை மதிப்பிடுவதற்காக சான்றிதழ்கள் வழங்கப்படுகின்ற பிரேரணையைத் தவிர இவ் இளைஞர் யுவதிகளுக்காக எடுக்கப்படும் மிகுதி நடவடிக்கைகள் எதுவும் காணப்படவில்லை. நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்த செலவுகள் ரூபா 17,691,863 தொகையானதுடன் வேறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,788,678 தொகை கணக்காய்வின் போது தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை. மன்றத்தின் இளைஞர் அமைப்பு மற்றும்

அபிவிருத்திப் பிரிவினால் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டின் விரிவான கிராமியப் பங்களிப்பை உருவாக்கும் நோக்கு எய்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இளைஞர் சங்க நியதிச்சட்டத்தின் பிரகாரம் ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு ஒரு இளைஞர் சங்கம் படி தாபிக்கப்பட வேண்டிய போதிலும் நாட்டின் 332 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இயங்கிய 14013 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு ஒப்பாக தாபிக்கப்பட்டிருந்த மொத்த இளைஞர் சங்களின் எண்ணிக்கை 9307 ஆகக் காணப்பட்டது. இளைஞர் சங்கம் தொண்டர் அமைப்பென்பதனால் ஒவ்வொரு பிரதேசங்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் அவர்களின் முன்வருகையின் படி தாபிக்கப்படக்கூடிய அமைப்பு என தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹெய்யத்துடுவ பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பாடநெறிகள் அனைத்தும் 2002 ஆம் ஆண்டின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு இவ்வறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்ட கட்டளைகள் செயற்படுத்தப்படாமை

---

(அ) உடுதும்புர பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் அக் காரியாலயக் கடிதத் தலைப்புக்களில் தமது உத்தியோகபூர்வ பதவிகளைப் பயன்படுத்தி உடுதும்புர பிரதேச இளைஞர் யுவதிகளின் பொருளாதார அபிவிருத்திக்காக என்ற பொய்யான தகவல்களைக் காட்டி இலங்கை ஹதபிம அதிகாரசபையின் கீழ் காணப்படும் கொத்மலை விவசாயப் பயிற்சி நிலையத்தில் இருந்து 16 பசுமாடுகள் 2009 பெப்ரவரி 25 ஆம் திகதி ரூபா 160,000 இற்கு சலுகை விலையில் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த அனைத்து விலங்குகளும் இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்குறித்த உத்தியோகத்தருக்கும் அவை சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தருக்கும் எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் அறிவிக்குமாறு 2010 நவம்பர் 03 ஆம் திகதி கூட்டப்பட்ட பாராளுமன்ற பொது முயற்சிகள் தொடர்பான

குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் உரிய உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்தப்படுவதற்கு 2011 சனவரி 31 வரை காலம் கடந்திருந்தது. இதனைத் தவிர 2011 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைக்கப்பட்ட நிறுவகமான வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என 2007 சனவரி 12 ஆம் திகதி கூடிய பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கட்டளை செயற்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீர் மற்றும் மின்சாரம் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனியினால் பயன்படுத்தப்படும் மன்றத்திற்குச் சொந்தமான சொத்துக்களுக்காக 2004 ஆம் ஆண்டு வரை அக் கம்பனியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,076,734 தொகை 22/2006 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி 2009 ஆம் ஆண்டின் போது கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கம்பனியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,288,431 தொகை 2009 திசெம்பர் முதல் 20% படி ஈடுசெய்யப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், 2010 வரை இதில் ரூபா 761,569 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எனினும் 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய 18/2010 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி இந்த 20% அறவீடும் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2010 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 1,588,431 மேலும் கம்பனியிடம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) தேசிய இளைஞர் வெற்றி விழா – 2009

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் வெற்றி விழாவிற்காக ரூபா 5,485,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 8,336,403 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 2,851,403 தொகையான ஏற்பாட்டிற்கு மிகையாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நி.பி. 177(1) இன் பிரகாரம் பரிசுப் பணம் வழங்கப்பட்டதன் பின்னர் முற்பணத் தொகையில் மிகுதித் தொகை மறுநாள் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 506,000 தொகை 15 நாட்கள் கையில் வைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் வங்கியில் வைப்புச் செய்யடப்பட்டிருந்தது.

(iii) பல்வேறு போட்டிகளில் முதலிடம் பெற்ற 38 பேருக்கு வெற்றி விழா இடம்பெற்ற வேளையில் சான்றிதழ்கள் வழங்கப்படாது மாவட்டக் காரியாலயங்களின் மூலம் அப் பரிசுகள் வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் பணிப்பாளர் நாயகத்தினால் இப் பரிசுகள் வழங்கப்படாது விடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(iv) வெற்றிபெற்றோரது ஆக்கங்களை உள்ளடக்கிய இரண்டு வெளியீடுகளின் இரண்டாயிரம் பிரதிகள் 2010 மார்ச் மாதம் அச்சிடப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 182,873 தொகையான 961 பிரதிகள் 2010 யூலை வரையும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

(v) ஒரு சந்தர்ப்பத்தில் பத்திரிகை விளம்பரம் ஒன்று தொடர்பாக ரூபா 36,288 செலவிடப்பட்டு 04 சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட விலை மனுக்கள் தொடர்பாக கருத்திற்கொள்ளாது அவ் விலை மனுக்களில் ஆகக் கூடிய விலைகளை சமர்ப்பித்திருந்த நிறுவகத்தினால் ஒரு நாளைக்குள் மீண்டும் விலை மனுக்கள்

கோரப்பட்டு கொள்வனவு வழிக்காட்டிக் கோவையின் 6.2.2 மற்றும் 2.14.1 ஆம் உப பிரிவுகளிற்கு முரணாக பளிங்கு படிகத்தைத் தயாரிப்பதற்காக ரூபா 467,500 தொகைக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தது.

(vi) அரங்கின் பின்புறத்தை அலங்கரிப்பதற்காக ரூபா 1,575,000 இற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 8.9.1 ஆம் உப பிரிவின் பிரகாரம் இதற்காக உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்றத்தின் மூன்று உத்தியோகத்தர்களினால் 1989/90 காலப்பகுதியில் எரிபொருட் கட்டளைகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டு நேர்ந்த மோசடிகள் தொடர்பில் 1990 பெப்ரவரி 01 ஆம் திகதி மன்றத்தினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட எழுத்து மூல முறைப்பாட்டின் பிரகாரம் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 9115/97 ஆம் இலக்கத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு 2008 ஒக்டோபர் 24 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தண்டப்பணமாக ரூபா 580,000 தொகை கௌரவ நீதிமன்றத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 22 ஆண்டுகள் கடந்திருந்தும் இது தொடர்பாக மன்றத்திற்கு ஏற்பட்ட ரூபா 1,147,688 தொகையான நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு வரை முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக குடியியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறு நீதிபதியால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனியின் கணக்காய்வு நடவடிக்கைகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உள்ளகக் கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென 2011 சனவரி 24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு செயலாளரினால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் 28 ஆம் திகதி வரையும் அக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாட்டுப் பயணம் - தென் ஆபிரிக்க உலக இளைஞர் மற்றும் மாணவர் கருத்தரங்கு

மன்றத்திற்கு எவ்வித தொடர்பும் அற்ற இரு தொண்டர் அமைப்புக்களின் நான்கு அங்கத்தவர்களுக்கு விமானச்சீட்டுக்கள் மற்றும் இணைந்த படியாக ரூபா 214,631 தொகை மன்றத்தின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே, விமானச் சீட்டுக்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களுக்காக உரிய நிறுவகங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக தனியார் நிறுவகத்திற்கு ரூபா 1,750,000 தொகையினை செலுத்துவதற்கு மன்றம் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறெனினும் இத் தொகை வெளிநாட்டு விவகார அமைச்சினால் மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹெய்யன்துடுவ பயிற்சி நிலையத்தின் உள்ளக விளையாட்டரங்கினை மேம்படுத்துதல் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமையால் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்காக வழங்கப்பட்ட காலமும் கடந்து 02 ஆண்டுகள் கடந்திருந்தன. எனினும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராததுடன் இறுதிக் கணக்குகளில் தொடர்ந்தும் நடைமுறை வேலையாக ரூபா 2,432,464 காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (இசை) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (நடன) கம்பனி பங்கு முதலீட்டிற்காக ரூபா 4,032,360 தொகையினை 1985 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரையான காலப்பகுதியின் போது செலவிட்டிருந்தது. இம் முதலீட்டிற்காக எவ்வித இலாபமும் 2010 ஆம் ஆண்டு வரையிலும் பெறப்பட்டிராததுடன்

வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (இசை) கம்பனியும் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் (நடன) கம்பனியும் எவ்வித செயற்பாடும் இன்றி பெயரளவிலான நிறுவகங்களாகும்.

(ஆ) பாணந்துறை, மஹரகம மற்றும் அனுராதபுரம் இளைஞர் சரசவியவினை நிர்மாணிப்பிற்காக மூல வரைபடத்தைத் தயாரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 575,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அந் நிர்மாணிப்புக்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்றத்திற்கு தொடர்பற்ற இளைஞர் வெகுமதி அதிகாரசபையின் விடயத்திற்குரிய தங்க கேடயம் வழங்கும் விழாவிற்காக ரூபா 100,000 தொகை அவ் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் சகல நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டதன் பின்னர் விழா பிற்போடப்பட்டிருந்தமையால் நடைபெறவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது செயற்பட்ட 04 இளைஞர் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரசார விளம்பரங்களுக்காக மாத்திரம் ரூபா 9,502,289 செலவிடப்பட்டிருந்ததுடன் அது அந் நிகழ்ச்சித்திட்டங்களின் மொத்தச் செலவினத்தில் 23% ஆகும்.

### 3.2.6 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பேருவளை இளைஞர் நிலைய நிர்மாணிப்பிற்காக 2000 யூலை 07 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 50 ஆண்டு கால குத்தகைக் காலப்பகுதிக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து ரூபா 3,330,000 இற்கு காணி ஒன்று குத்தகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் 2008 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணிக்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 3,374,330 ஆகக் காணப்பட்டது. கொள்வனவு செய்யப்பட்டு 10 ஆண்டுகாலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.7 பண்ணைகளைப் பராமரிப்பதனால் ஏற்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 08 ஏக்கர் நிலப்பரப்பிலான ஹெய்யன்துடுவ விவசாயப் பண்ணையில் தென்னை பயிரிடப்பட்டதைத் தவிர முறையான வகையில் மேற்கொள்ளப்பட்ட வேறு எந்த விவசாயப் பயிர்ச் செய்கையோ அல்லது கால்நடை வளர்ப்போ காணப்படவில்லை. 2010 ஆம் ஆண்டிற்காக பண்ணையில் இருந்து பெறப்பட்ட தேறிய இலாபம் ரூபா 236,362 ஆகக் காணப்பட்டது. எவ்வாறெனினும் 2010 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கின் மூலம் பண்ணைகளின் தேறிய இலாபம் ரூபா 331,667 ஆக தவறாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மன்றத்தினால் 03 பண்ணைகளில் இருந்து 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 248,551 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.2.8 தவறான கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெய்யன்துடுவ தேசிய கரப்பந்தாட்ட பயிற்சிக் குழுவில் வீர வீராங்கனைகளுக்காக உணவு வழங்கப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ஒரு வியாபார நிலையத்திடம் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளுக்காக செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட தொகையையும் அவ் வியாபார நிலையத்திலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம் உள்ளபடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளின் பெறுமதியையும் ஒப்பிடுகையில் ரூபா 252,002 தொகை பிழையாக அதிகமாகப் பெறப்பட்டிருந்தது.

**3.2.9 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட மன்றத்தின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்றத்தில் நியமனம் பெற்ற 22 உத்தியோகத்தர்கள் ஏனைய 05 அமைச்சுக்களுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களில் வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்ட 12 உத்தியோகத்தர்களின் 2010 ஆம் ஆண்டிற்கான ரூபா 3,644,994 தொகையான சம்பளம் மன்றத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அத் தொகையினை உரிய வரிசை அமைச்சினால் மீளளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.10 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 14 வாகனங்களின் மைலோ மீட்டர் ஒரு ஆண்டிலும் பார்க்க அதிக காலமாக செயற்படாது காணப்பட்ட போதிலும் நி.பி. 1653 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்றத்தினால் பயன்படுத்தப்பட்ட 1985 முதல் 1988 வரையான காலத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 21 வாகனங்களின் உரிமை கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு முதல் வேறு அரச நிறுவகத்திடம் காணப்பட்டதுடன் இவ் உரிமையினை மன்றத்திற்கு ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இவ் வாகனங்களின் கிரயம் மற்றும் கொள்வனவிற்காக நிதியளித்த நிறுவகமும் நிச்சமற்றுக் காணப்பட்டது.

(இ) விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட தற்பொழுது இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சிடம் இருந்த 50-2592 ஆம் இலக்க வாகனம் அவ் அமைச்சிற்குத் தெரிவிக்காது ரூபா 265,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

**3.2.11 கூட்டுத்திட்டம்**

----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

2010 – 2014 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டத்தில், 2003 யூன் 12 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னைய 3 ஆண்டுகளுக்கு நிதிசார் விளைவுகளும் எய்தப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதிகளும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் வருடாந்த முன்னேற்றத்தினை நிதிசார் ரீதியாக மதிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

**3.2.12 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படல் மற்றும் தீர்மானங்களை அமுலாக்கல்**

----------------------

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(அ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு 2009 ஆம் ஆண்டு முதல் வரிசை அமைச்சின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படல்.

(ஆ) இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேடு முறையாகப் பேணப்படல்.

(இ) 4000 விளையாட்டு மைதான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கரப்பந்தாட்ட கம்பங்கள் பகிரப்பட்டு முடிவுறுத்தல்.

(ஈ) 27 வாகனங்களை மன்றத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(உ) பல வருட காலமாக முன்கொண்டு செல்லப்பட்டு வரும் பெறவேண்டிய கணக்குகளை பதிவழிப்பது தொடர்பாக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல்.

(ஊ) காலம் கடந்த ஒப்பந்த முற்பணங்கள் ரூபா 833,202 தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பித்தல்.

(எ) எவ்வித அபிவிருத்திச் செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிராத பேருவளை காணிக்காக செயற்திட்ட பிரேரணைகளை முன்வைத்தல்.

### 3:2.13 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறைசேரி ஏற்பாடு, அமைச்சு மற்றும் அரச நிறுவகப் பெறுவனவுகள் உள்ளக உழைப்பு ஆகிய நிதி வழங்கும் மூலங்கள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு ஒட்டு மொத்த பாதீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் ஆரம்ப செலவின மதிப்பீடானது ரூபா 45.41 மில்லியன் தொகையால் அதிகரிக்கும் வகையில் மீளாய்வாண்டின் போது பல தடவைகள் திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டிற்கான செலவினம் அத் திருத்தப்பட்ட பெறுமதியினைப் பார்க்கிலும் ரூபா 6.85 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தது.

(இ) இதன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) விவசாய நடவடிக்கைகள்
(ஆ) பெறவேண்டிய கணக்குகள்
(இ) ஆட்சேர்ப்பும் இணைத்துக் கொள்ளலும்
(ஈ) எரிபொருட் படி
(உ) வாகனங்கள்
(ஊ) இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்
(எ) கொள்வனவு வழிகாட்டி
(ஏ) வெளிநாட்டு பயணம்
(ஐ) முதலீடுகள்